**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்**

**முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்**

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆண்டு விசுவாவசு வருடம், ஐப்பசி மாதம் 12 ம் நாள்

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29-ம் நாள் புதன்கிழமை

**இடைக்கால மனு எண்.6/2025**

**in**

**அசல் வழக்கு எண். 38/2019**

1. ரங்காத்தாள்

2. செல்வி

3. பூபதி ...**மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்**

//எதிர்//

ராமச்சந்திரன் .....**எதிர்மனுதாரர் / வாதி**

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.மகேசன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.K.பிரபுராம் அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 1 & 2 மற்றும் 151 ன் கீழ் IA.3/2022 மனுவில் தாவா சொத்தினை கள ஆய்வு பணி மேற்கொண்டு சூலூர் வட்ட நில ஆய்வாளருக்கு சம்மன் அனுப்பியும் பிரதிவாதி சாட்சியாக விசாரணை செய்ய உத்தரவிடும்படியும் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:**

1.1). வாதி இவ்வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கினை பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். IA.No.3/2022 மனுவில் தாவா சொத்தினை கள ஆய்வு பணி மேற்கொண்டு சூலூர் வட்ட நில ஆய்வாளர் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். மேற்படி வரைபடத்தில் தாவா சொத்தினை பொறுத்து ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை என சமர்ப்பித்துள்ளார். மேலும் சொத்தில் அளவீடுகள் குறித்தும் மேற்படி வட்ட நில அளவையார் தாக்கல் செய்துள்ள வரைபடம் குறித்து விசாரணை செய்ய வேண்டியது அவசியமானது ஆகும். மேற்படி வட்ட நில அளவையரை விசாரணை செய்தால் மட்டுமே தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என்பதை நிரூபணம் செய்ய முடியும். எனவே IA.No.3/2022 மனுவில் தாவா சொத்தினை தள ஆய்வு பணி மேற்கொண்ட சூலூர் வட்ட நில அளவையருக்கு சம்மன் அனுப்பி பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியாக விசாரணை செய்ய உத்தரவிடும்படி வேண்டப்படுகிறது. இம்மனுவினை அனுமதிக்காத பட்சத்தில் 3 ம் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும். எனவே, மனுவானது அனுமதிக்கப்பட வேண்டும்.

**2). எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :**

2.1). மேற்படி மனு பொய்யானது, மோசடியானது. மேற்படி மனுவானது சட்டப்படியும், நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டவற்றைத் தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். இந்த மனுவானது I.A.No.3/2022 மனுவில் சொல்லியுள்ள வட்டசார் ஆய்வாளரை விசாரிக்க வேண்டி மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். ஏற்கனவே நீதிமன்ற ஆணையரம் வட்டசார் ஆய்வாளரும் வழக்கு சொத்தை அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார்கள். இந்நிலையில் எவ்வித காரணமும் இல்லாமல் மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதல்ல. மேலும் மனுதாரர்கள் என்ன காரணத்திற்காக மேற்படி அலுவலரை விசாரிக்க வேண்டும் என குறிப்பிட்டு

சொல்லவில்லை. வழக்கு நடவடிக்கைகளை தாமதப்படுத்த வேண்டியே மனு தாக்கல் செய்ய பட்டுள்ளது. எனவே மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

3. இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.

4. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

5. மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இரு தரப்பும் கேட்கப்பட்டது வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக் கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் சாட்சிக்காக நிலுவையில் உள்ளது.

5.1). அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு வழக்கு சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு எதுவும் இல்லை என அறிக்கை சமர்ப்பித்துள்ளார். இந்நிலையில் சொத்தில் அளவீடுகள் குறித்தும் வட்ட நில அளவையர் தாக்கல் செய்துள்ள வரைபடம் குறித்து விசாரணை செய்ய வேண்டியது அவசியம் என சொல்லப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் அதற்கு ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் ஆக்கிரமிப்பு எதுவும் இல்லை என சொல்லியுள்ள நிலையில் மனுதாரர் தரப்பு வழக்கை நிரூபிக்க அவருக்கு ஒரு வாய்ப்பு வழங்கும் விதமாக சொத்தின் அளவீடு குறித்து வட்ட நில அளவையாளர் தாக்கல் செய்துள்ள வரைபடம் குறித்து விசாரணை செய்ய தாக்கல் செய்துள்ள இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

**முடிவாக மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :- இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :- இல்லை

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

Draft/Fair order
IA.No.6/2025 in
OS.38/2019 in
Dated: 29.10.2025
DMC, Sulur.